மலர் 2 இதழ் 2 அக்டோபர் 2017 ISSN – 2454-3993

# இலக்கியங்களின் சிற்றணிகலன்கள்

**முனைவர் நா. அமுதாதேவி**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
**கோயம்புத்தூர்**

**முகவுரை**

தொன்று தொட்டுத் தமிழர்கள் நுண்கலைகளை அவற்றில் சிறப்பாக அழகுக்கலைகளை அதிகம் உணர்ந்தவர்கள். இதற்கு அவர்கள் காலம் காலமாக அணிந்துவரும் ஆடைவகைகளும் அணிகலன்களும் சான்றுகளாக அமைந்துள்ளன. உலகில் உள்ள எல்லா மக்களும் அணிகலன்களை அணிந்து வருகின்றார்கள். அணிகலன்களின் உற்பத்தி நாட்டுக்கு நாடு வேறுபட்டதாக உள்ளது. அது அந்நாட்டு மக்களின் அறிவு, அந்நாட்டில் கிடைக்கும் பண்டங்கள், அந்நாட்டின் தட்பவெப்ப நிலை இவற்றைப் பொருத்து அமைந்திருக்கின்றது. தமிழர்கள் அணிந்து வந்த ஆதிகால அணிகலன்களைப் பொதுவாக பேரணிகலன் எனவும் சிற்றணிகலன் எனப் பகுக்கலாம். பேரணிகலன்களைப் பெண்களின் அணிகலனாகவும் சிற்றணிகலன்களை ஆண்கள், சிறுகுழந்தைகளின் அணிகலனாகவும் கருதிவந்தனர்.

பெண்மையின் அழகிற்கு மெருகூட்டுவனவாக அணிகலன்கள் விளங்குகின்றன. பெண்களும் தம்மை அழகுபடுத்திக்கொள்வதில் அணிகலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துவருகின்றனர். அணிகலன்கள் பெண்களுக்கு மட்டும் உரியவை என்ற சிந்தனை இன்று பரவலாகக் காணப்படுகின்றது. அதற்கு மாற்றாக அக்காலத்தில் ஆண்கள் தங்களை ஒப்பனை செய்துகொள்ளப் பயன்படுத்திய அணிகலன்களையும், குழந்தைகளுக்கான அணிகலன்களையும், மறக்கப்பட்ட அணிகலன்களையும் நினைவுகூறும் வண்ணம் இக்கட்டுரையின் பொருண்மை அமைந்துள்ளது.

**இயற்கை அணிகலன்**

நாகரிக வளர்ச்சியில் ஆடைகள் மட்டும் அன்றி அணிகலன்களும் மிகச்சிறந்த இடம் பெற்றுள்ளன. மரம், செடி, கொடி வகைகளின் இலை, பூ, காய், வித்து முதலியவற்றையும் விலங்குகளின் எலும்பு, நகம், பல், பறவைகளின் இறகு, பவளம், சங்கு, சிப்பி, முத்து போன்றவற்றைக்கொண்டு மக்கள் பழங்காலந்தொட்டே தம்மை அழகுபடுத்திக் கொண்டமையை அறியமுடிகின்றது.

**“அலைகடன் முத்தும் பவளமும் தோன்ற**
**மலையிடை நன்மனி மண்ணிடைப் பொன்னே**
**விலைபெறு பூண்களாகித் திகழ்ந்தின்**
**னிலை பெறு வாழ்வினணி.”**

என்ற பழம் பாடலின் மூலம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அணிகலன் மக்கள் வாழ்வில் தோன்றி வளர்ந்து வந்துள்ளது உற்றுநோக்கத்தக்கதாகும்.

**பெயர்த்தோற்றம்**

அணியப்படுவதால் அதற்கு அணிகலன் என்ற பெயர் எழுந்தது. அணிகலன் என்பதற்கு ஆபரணம், நகை, தடையம், பணி, அலங்காரம் என்று பல பொருள்கள் கூறப்படுகின்றன.(கழகத்தமிழ் அகராதி-பக்-16)

முற்காலத்தில் தமிழ் மக்களுக்குப் பேய், பிசாசு, நோய்கள் முதலியவற்றின் மீது அச்சம் அதிகம். அதைத் தடை செய்ய கையிலும் காலிலும் இடுப்பிலும் ஒரு நூல் கட்டுவர். இதனைக் கட்டினால் நோய் அணுகாது, பேய் நெருங்காது என்று பெரியோர்கள் கூறி வந்தனர். இன்று நமது நாட்டில் நடைபெறும் திருமணத்தின் போதுகையில் குருக்கள் ஒரு நூலைக் கட்டுவார். அது 'காப்புக் கட்டுதல்' என்று அழைக்கப்படும். பிற்காலத்தில் காப்பு அணிகலனாக மாறியது.

**மூடநம்பிக்கை**

தமிழக அணிகலன்களில் ஞாயிறு, திங்கள், பாம்பு, உருவங்கள் பெரிதும் இடம் பெற்றிருந்தன. ஞாயிறும் திங்களும் தமிழர்கள் ஆதியில் கண்ட தெய்வ உருவங்களில் முக்கியமானவை. பாம்பு, சிவபெருமான், காளி முதலியன தெய்வங்களின் அணிகலன்களாகும். மேலும் பாம்பு தமிழர்கள் நாகர்களோடு கொண்ட கலப்பாலும் சமயப்பிணைப்பாலும் எழுந்துள்ள அணிகலனாகும். காப்பு, தடையம், தாலி, இயந்திரக்குழல், போன்ற அணிகலன்கள் மக்களைப் பேய், பிசாசு, அணுகாது தடுக்கும் சமயச் சார்பான அணிகலன்களாகும். கருடன், யாழி, போன்ற உருவம் அற்ற அணிகலன்களும் சமயம் தொடர்பானவையாகவே இருந்தன.

அணிகலன் பூணுவது, அழகுக்கும் மதிப்பிற்கும் மட்டும்இன்றிச் சில சமயங்களில் குருட்டு நம்பிக்கைகளையும் பொறுத்து அணியப்பட்டு வருகின்றன. மணப்பெண்ணாக இருக்கும்பொழுது எல்லாவிதமான அணிகலன்களும் அணிவிக்கப்படும். கைம்மை அடைந்தால் அணிகலன்கள் அனைத்தும் அகற்றப்படும். இது சமய வழக்கமாகும்

**குழந்தைகளின் அணிகலன்கள்**

தமிழர்கள் சங்ககாலம் முதல் தங்கள் குழந்தைகளுக்குப் பொன்னாலான அணிகலன்களை அணிந்து மகிழ்வித்து வந்தனர். இதற்கு இலக்கியங்களில் பல சான்றுகள் உள்ளன. பொதுவாகக் குழந்தைகளுக்குத் தலையில் சிறு சுட்டியும் காதில் சிறு குண்டலமும் கழுத்தில் ஐம்படைத்தாலியும் கையில் காப்பும் விரலில் மோதிரம் போன்ற அணிகலன்களும் இடுப்பில் பொன்ஞானும் அரைச்சதங்கையும் காலில் தண்டை, சதங்கை போன்ற அணிகலன்களும் அணிவிப்பர். பெண் குழந்தைகள் எனில் அரையில் அரை மூடி என்னும் பொன் அணி அணிவிப்பார்கள். அவற்றில் சில அணிகலன்கள் குறித்துக் காண்போம்.

**ஐம்படைத்தாலி**

இவ்வணி காப்பைப் போல குழந்தைகளின் பாதுகாப்பிற்காக சூட்டப்படும் அணிகலன் ஆகும். இது திருமாலின் ஐம்படைகளான சங்கு, சக்கரம், கதை, கடகம், சார்ங்கம், என்னும் ஆயுத வடிவிலான அணிகலனாகும். பழந்தமிழர்கள் இவ்வணிகலன்களை சிறுவர்களுக்கு அணிந்து வந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. இது குழந்தைகளுக்கு நோய் வராதிருக்க கட்டப்படுவதாகும்.

காவிரிப்பூம்பட்டிணத்தில் நல்ல முருகனுக்கு விழா நடந்தது. அதைக் கண்டுகளிக்கும் பொருட்டு ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் அந்நிகழ்வினைக் கண்டுகொண்டு இருந்தனர். சிறிய குழந்தைகள் தங்கள் கழுத்தில் அணிந்திருந்த ஐம்படைத்தாலி என்னும் இவ்வணிகலனை அவர்கள் வாயில் இருந்து சிந்தும் உமிழ்நீர் நனைத்தது. இந்நிகழ்வினைச் சீத்தலைச் சாத்தனார் மணிமேகலை என்னும் காப்பியத்தில்

**"செவ்வாய்க் குதலை மெய் பெறா மதலை**
**சிந்தும் சின்னீரைம் படை நனைப்ப**
**வற்றங் காவாச் சுற்றுடைப் பூந்துகில்"(மணி-3:137)**

என்ற பாடலடிகளின் மூலம் அழகுபட எடுத்துரைத்துள்ளார். தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் தன் இளம் பருவத்தில் ஏறு போல போர்க்களம் புகுந்தான். அவன் கழுத்தில் ஐம்படைத்தாலி இருந்தது. இதனைப் புறப்பாடலில் *“தாலி களைந்தன்றும் இலனே”(புறம்-77 )* என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**புலிப்படைத்தாலி**

முற்காலத்தில் புலிப்பல் தாலி என்னும் நகை பூட்டி குழந்தைகளுக்கு அழகுபடுத்தினர். இன்று குழந்தைகளுக்குப் புலிநகத்தைப் பொன் தகட்டில் பதித்து சங்கிலியில் கோத்து அணிகின்றனர். சிலப்பதிகாரம் இதனை

**“மறங்கொள் வயப்புலி வாய்பிளந்து பெற்ற**
**மாலை வெண்பற் றாலிநிரை பூட்டி”(சிலம்பு-17:27-28)**

என்ற இவ்வரிகளின் மூலம் உணர்த்தியுள்ளது. பல நூல்களில் புலிப்பல், புலிநகம், போன்ற அணிகலன்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**தொடி**

இது பொன்வளை, பொன்றொடி எனப்படும். சிறுகுழந்தைகளுக்குப் பொன்றொடி அணியும் வழக்கம் முற்காலத்தில் இருந்து வந்தது. அகம் இதனை(16-5) குறிப்பிட்டுள்ளது. பல வகையான தொடி அணிகலன்கள் வழக்கில் இருந்துள்ளன. நண்டின் கண் போன்ற அறுப்பு வேலைகள் செய்த அழகிய தொடிகளைத் தம் சிறு குழந்தைகளுக்கு மன்னர் அணிவித்து அழகு சார்ந்தமையைக் கலித்தொகை

**“கையதை ஆலவன் கண்பெற அடங்கச் சுற்றிய**
**பலவுறு கண்ணுள் சிலகோல அவர் தொடவு” (35:6-7)**

என்ற பாடலடிகளின் மூலம் உணர்த்தியுள்ளது.

**கிண்கிணி**

இது காலணிகளில் ஒன்றாகும். தவளையின் வாய் வடிவில் இவ்வணிகலன் இருக்கும். இதனைத் *“தேரை வாய் கிண்கிணி ஆர்ப்ப”* (86:9)எனக் கலித்தொகை இவ்வணிகலனைக் குறிப்பிட்டுள்ளது. குறுந்தொகை *“தவளை வாய் பொலஞ்செய் கிண்கிணி”* என்று சுட்டிக்காட்டியுள்ளது. இவ்வணிகலனை அணிந்துகொண்டு நடக்கும்போது கிண்கிண் என்று ஓசை எழும்புவதால் இப்பெயர் பெற்றது. திருமுருகாற்றுப்படை(13)“கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சுறடி” என இவ்வணிகலனைக் குறிப்பிட்டுள்ளது.

**சதங்கை**

இது பொன்னால் புகலாய் செய்து நுனியில் சிறு அரும்புகள் வைத்து மேலே மடை வைத்துள்ள சிறு அணியாகும். இவ்வணி நாற்பது அல்லது ஐம்பது சதங்கைகளைக் கயிற்றிலே அல்லது பொன் வெள்ளிக் கொடியிலோ கோர்த்து சிறுவர் சிறுமியர் இடுப்பில் அணியும் அணியாகும். இதனை,*“பரியக நூபுரம் பாடகஞ் சதங்கை”(சிவ.சிந்-6-84)*சீவகசிந்தாமணி சதங்கை எனும் அணிகலன் குறித்து எடுத்துரைத்துள்ளது. நல்லிசைப் புலவராகிய உருத்திரங் கண்ணனார் பட்டினப் பாலையில் “பொற்கால் புதல்வர்” என்று இவ்வணியினைச் சிறுவர்கள் அணிந்து வந்தமையைச் சுட்டியுள்ளாள்.

**ஆண்களின் அணிகலன்கள்**

முற்காலம் தொட்டு ஆண்கள் அதிகமான அணிகலன்களை அணிய விரும்பவில்லை. ஆனால் இல்லாள் அணிகலன்களை அதிகமாக அணிந்து கொள்ள வேண்டும் என

விரும்பினார்கள். ஆண்கள் குறிஞ்சி நில வாழ்விலும் முல்லை நில வாழ்விலும் புலியோடு போராடி வெற்றிபெற்று அதன் பல், நகம் முதலியவைகளைக்கொண்டு தான் விரும்பும் பெண்ணிற்குக் கொடுத்து வந்தமையை அறியமுடிகின்றது. ஆண்கள் பொருள் தேட வெளியூருக்கும் வெளிநாடுகளுக்கும் செல்ல நேர்ந்தது. அவர்கள் பகை வீரர்களுடன் போரிடுவதும் அவசியமான ஒன்றாக இருந்தது. இந்நிலையில் அவர்கள் விலையுயர்ந்த கற்கள் பதித்த பொன் அணிகலன்களை எல்லாம் அணிந்துகொள்ள முடியாத நிலை இருந்தது. ஆதிகாலத்தில் அரசர்களே அதிகமான அணிகலன்களை அணிந்து வந்தனர். அதனை அடுத்து அமைச்சர்களும் பெரிய நிலக்கிழார்களும் பெரிய வணிகர்களும் தங்கள் உயர்நிலையை உலகிற்குக் காட்ட அணிகலன்களை அணிந்துவந்தனர்.

**மகுடம்**

மன்னர்கள் தலையில் மகுடம் அணிந்துவந்தனர். மற்றவர்கள் தலைப்பாகை அணிந்துவந்தனர். முனிவர்கள் சடாபாரம் தாங்கிவந்தனர். மன்னர்கள் அவர்களின் பதவிக்காக மகுடம் தாங்குவது இன்றியமையாததாக இருந்தது. மகுடங்களின் வகைகளும், அவற்றின் தோற்றமும், அளவும் பொன்னின் எடையும், மணிகளின் பெயர்களும், எடையும், அணி செய்ய வேண்டிய முறையும், முடிசூட வேண்டிய தன்மையும் சிற்ப நூல்களில் கூறப்பட்டுள்ளன. திருமுகாற்றுப்படை(84) முடியொரு விளங்கிய முரண் மிகு திருமணி என இதனைச் சுட்டியுள்ளது.

**அரையணி - அரைஞாண்**

அரைஞாண் அரசர்களும் அமைச்சர்களும் செல்வர்களும் அரையில் தரிக்கும் பொன்னாலான திரட்சியான ஒரு கொடியாகும். இந்தப் பொற்பொடி பூணும் வழக்கம் இன்றும் பல பெருந்தணக்காரர்கள் இந்தப் பொற்கொடியினைப் பூண்டுவருகின்றனர். மற்றவர்கள் வெள்ளியால் ஆகிய அரைஞாண் அணிகின்றனர்.

**வீரவளை**

இது கையில் அணிந்து கொள்ளும் ஒரு பொன் அணியாகும். வீரர்கள் வெற்றி பெற நடத்திய போருக்காக அவர்களுக்கு அணிவிக்கப்படும் ஒரு வளையாகும்.

**கடகம்**

காப்பை ஒத்த ஒரு கையணிகலனாகும். மகரவாய் உடையதாகவும் மாணிக்கமணிகள் பூட்டப்பட்டதாகவும் இவ்வணி அமையும். “கவின்பெற இதைச் செய்த கைக்கு கடகம் போடவேண்டும்” என்று முதுமொழி கூறுவர். முல்லைப்பாட்டு இதனை “ஒருகை முடியொடு கடகம் சேர்த்தி”(76) என்று குறிப்பிட்டுள்ளது.

**வாகுவளையம்**

அரசர்கள் தங்கள் வீரத்திற்கு அறிகுறியாத் தங்கள் புயத்தில் அணியும் பொன் அணிகலனாகும். இவ்வணியை வாகுவலயம் எனவும் அழைத்துவந்துள்ளனர். திருமுருகாற்றுப்படை(114) “கீழ்வீழ் தொடியொடுமீமிசை தொட்ப ஒருகை” எனச் சுட்டியுள்ளது. வைகையாற்றில் புதுப்புனல் பொங்கி எழுந்தது. ஆண்களும் பெண்களும் நீராட்டுவிழாக் கொண்டாடினர். வெள்ளம் அவர்கள் அணிந்திருந்த நகைகள் சிலவற்றைப் பறித்துச்சென்றது. அதில் வாகுவலயமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இது பழங்காலத்தமிழர் அணிகலன்களில் ஒன்று என்பது புலனாகின்றது. பரிபாடல் இதனை

**“கைவளை ஆழி தொய்யகம் புனை துகில்**
**மேகலை காஞ்சி வாகுவலயம்**
**எல்லாம் கவரும் இயல்பிற்றாய்”(பரி.பா.7:46-48)**

என்ற இவ்வரிகளில் உணர்த்தியுள்ளது.

**மோதிரம்**

கைவிரல்களில் நடுவிரல் நீங்கலாக ஏனைய நான்கு விரல்களிலும் பொன்னால் செய்த மோதிரங்களை அணிவர். இதில் பலவகையான வடிவமும் நவமணிகள் பதிக்கப் பெற்றதாகவும் இருக்கும்.

**(அ) ஏனாதி மோதிரம்**

மன்னர்கள் தம் போர் மறவர்களுக்கு ஏனாதி எனும் மோதிரமும் பரிசளித்து வந்தனர் இறையனார் அகப்பொருள் நூற்பா உரையில் நக்கரர் ஏனாதி மோதிரம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சிவகசிந்தாமணி(2569-2) இதனை,

**"ஆழ்கடல் சையத் தில்லா அருநிதி அரசு நல்ல**
**சூழ்மி ஆழி செம பொன் சூட்டொடு கண்ணிகாதல்"**

என்ற இப்பாடலடிகளிள் வழி குறிப்பிட்டுள்ளது.

**(ஆ) முத்திரை மோதிரம்**

மன்னர்கள் தங்கள் முத்திரை பொறித்த மோதிரத்தைக் கைவிரல்களில் அணிந்து வந்தனர் முக்கிய சாசனங்களில் இந்த முத்திரை மோதிரம் பதிக்கப் பெறும் என்பர். பாண்டியர்கள் இரண்டுமீன் செங்குத்தாய் நிற்கும் வடிவில் உள்ள முத்திரை மோதிரத்தை அணிந்து வந்தனர்.

**(இ) பொன்மோதிரம்**

பொன்னால் செய்யப்பட்ட மோதிரம் இது. இதில் பெயர் பொறித்தலும் உண்டு. சீவகன் தன் பெயர் பொறித்த மோதிரத்தைக் குணமாலைக்கு அளித்தான் என்று சீவகசிந்தாமணி(1040:9) "தாம்பான் மணிநாம மோதிரத் தொட்டையென்ன" எனக் குறிப்பிடுகின்றது.

**வன்னச்சரம்**

வீரர்கள் போரில் பகைவர்களின் கண்களைப் பறித்து யானையின் தந்தங்களில் இருந்து எடுக்கும் முத்துக்களோடு நரம்பில் கோத்து கழுத்தில் அணிந்து போருக்குச் செல்வர்.

**கடுக்கண்**

இது காதில் அணியும் ஒரு பொன் அணியாகும். இது வட்டமாகவோ அல்லது நீண்டு வளைந்தோ இருக்கும். இதன் இடையில் கற்கள் பதிக்கப்பெற்றிருக்கும். இதனைத் திருமந்திரம் "காதுப் பொனார்ந்த கடுக்கன்"(1424) என்று குறிப்பிட்டுள்ளது.

**வீரக்கழல்**

மன்னர்கள் காலில் தம் வீரத்திற்க்கு அறிகுறியாகவே கழல் பூண்டிருந்தனர். இதனைப் போருக்குப் போகும் பொழுது கண்டிப்பாக அணிந்து செல்வர். பகைவர்களை வென்ற வேந்தன் தோல்வியுற்ற அரசனின் மகுடத்திலுள்ள பொன்னை உருக்கிக் கழல் என்னும் அணி செய்து தாம் அவர்களை வென்றதற்கு அறிகுறியாகக் காலில் அணிந்து கொள்வான். இதற்கு வீரக்கழல் என்று பெயரிட்டு அழைத்துவந்தனர். திருத்தொண்டர் புராணம் இதனை "வீரக்கழல் காளன் விளங்க வணிந்து பாதஞ் சேரத்தொடு..."(711) என்று குறிப்பிட்டுள்ளது. மதுரைக்காஞ்சியில் பாண்டியன் பொன்னால் செய்த தும்பைப் பூக்களைப் போர்வீரர்களுக்கு வழங்கியமையும் மகரக்குழையையும் வீரக்கழல்களையும் மாங்குடிமருதனார்,

**"தீம் புழல் வல்சிக் கழற் கால் மழவர்**
**பூத்தலை முழவின் நோன்றலை கடுப்ப**
**பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர்"(மது.கா-395-397)**

என்ற பாடலடிகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

**வீரக்கண்டை**

இது காலில் அணிந்து கொள்ளும் ஒரு பொன் அணிகலனாகும். இக்கண்டை பெரிய மணிகள் கோத்த அணிகலனாகும். வீரர்கள் போரில் பகைவர்களை விரட்டியடித்து வெற்றி கொண்டதற்காக அணிவிக்கப்படும் அணியாகும். திருவாசம் இவ்வணிகலன் குறித்து செத்திலாப்பத்தில் *"பொய்யனேன் அகம் நெகப் புகுந்தமுதூறும் புதுமலர்க் கழலிணையடி பிரிந்தும்"(பா.எண்-1)* எனக் குறிப்பிட்டுள்ளது.

**பொலன் கழல்**

ஆடவர்கள் வீரத்தின் சின்னமாகக் காலில் கழல் அணிந்து வந்தனர். மன்னர்கள் பகை அரசர்களை வென்று அவர்கள் பொன்முடியால் வீரக்கழல் செய்து காலில் அணிந்து வந்தனர். பொன்னால் கழன்கள் செய்து காலில் அணிவதும் உண்டு. இது பொலன்கழல் எனப்படும். சிந்தாமணியில்,

**"படிய னல்காய் பசுமணிகள் வேய்த**
**தோங்கும் பைம் பொற் செறிகழலினாய்"(சீவகசிந்தாமணி-258-7:8)**

*எ*ன்ற பாடலடிகளின் வழி விளக்கியுள்ளது.

**பரிவடிம்பு**

பரிவடிம்பு பழங்காலத் தமிழர்களின் கால் அணிகளில் ஒன்றாகும். இது போர் மறவர்கள் குதிரை மீதேறி அதை விரைந்து செலுத்துவதற்கு என்று காலில் இடப்பெற்ற ஒரு வெள்ளிக் காலனியாகும். புறநானூறு இதனை "கடுமா கடைஇய விடுபரிவடிம்பின்" என்று சுட்டுகிறது.

**நிறைவுரை**

அன்றைய காலகட்டத்தில் பலவகையான அணிகலன்கள் வழக்கில் இருந்துள்ளமையை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. பெண்களுக்கு நிகராகப் பல ஆண்கள் இன்று தங்களை ஆபரணங்களால் அழகுபடுத்துக் கொள்கின்றனர். இன்றைய இளம் தலைமுறை ஆண்கள் பலரும் தங்கள் காதுகளில் கடுக்கன், கைகளில் காப்பு, மோதிரம் போன்ற அணிகலன்கள் அணிந்திருப்பதனைக் காணமுடிகின்றது. கால மாற்றம், கலாச்சார மாற்றம், சமுக மதிப்பீடு போன்றவற்றைக் கருத்தில்கொண்டு பல அரிய பழங்கால அணிகலன்கள் வழக்கொழிந்து விட்டன. எனினும் இத்தகைய பழங்கால அணிகலன்களை இன்று கோவில் சிற்பங்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. இலக்கியங்களில் பல பழைய அணிகலன்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை இன்றளவும் கண்டும் கேட்டும் அறிந்திராத புதுப்பொலிவுடன் புதிய உருவத்திலும் உள்ளன. அவ்வகையில் சிற்பங்களில் நுணுக்கமாகச் செதுக்கப்பட்டுள்ள அணிகலன்களைப் பார்க்கும்பொழுது மனிதன் அணிகலன்களின் மீது எத்தகைய பற்றுடையவனாக இருந்துள்ளான் என்பதனை அறிய முடிகிறது.